

கழக மூத்த முன்னோடியும் , தலைமைச் செயற்குழு உறுப்பினருமான குளித்தலை சிவராமன் அவர்கள் மறைந்ததை ஒட்டி கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு அவர்கள் நேரில் சென்று அவரது உடலுக்கு மலரஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். அருகில் குளித்தலை எம்.எல்.ஏ. மாணிக்கம், திருச்சி மாநகராட்சி மேயர் அன்பழகன், சேர்மன் துரைராஜ், ஒன்றிய செயலாளர் ராமச்சந்திரன் குடமுருட்டி சேகர்ஆகியோர் உள்ளனர்.



கழக மூத்த முன்னோடியும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான குளித்தலை சிவராமன் அவர்கள் உடல் நலக்குறைவால் மறைவெய்தினார். அவரது மறைவுச் செய்தி அறிந்து மாவட்ட கழக பொறுப்பாளர் வி. செந்தில் பாலாஜி, மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். குளித்தலை எம்.எல்.ஏ. இரா.மாணிக்கம் கிருஷ்ணராயபுரம் எம்.எல்.ஏ. க.சிவகாமசுந்தரி மற்றும் மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத்தினர் உடன் உள்ளனர்.

### கரும்பில் பருசீவல் நாற்றுகள் உற்பத்தியில்

# வருமானம் ஈட்டும் மகளிர் சுயஉதவிக்குழுக்கள்!

## தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் அறிவிப்பு!

சென்னை, ஆக. 30 - மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் புதிய பண்ணை சார்ந்த தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி, பயிற்சியளித்து, அவர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்காக பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

பொதுவாக, கரும்பு விவசாயிகள் நடவுக்கு சுமார் நான்கு டன் விதைக் கரும்பிலிருந்து 30,000 இரு பரு விதைக்கரணை களை பயன்படுத்துவார்கள். இதனால், ஏக்கருக்கு சுமார் 20,000 ரூபாய் செலவாகும். இம்முறையில் சில இடங்களில் நாற்றுக்கள் முளைக்காமல் கரும்பு வயலில் ஆங்காங்கே வெற்றிடங்கள் தெரியும். ஆனால், பருசீவல் நாற்று நடவு முறையில், பூச்சி, நோய் தாக்காத, அதிக மகசூல் தரும் கரும்பு இரகங்களின் விதைக் கரணை களிலிருந்து, விதைப்பருக்களை மட்டும் பிரித்தெடுத்து, பிளாஸ்டிக் குழித்தட்டு களில் வைத்து நிழல் வலைக்கூடங்களில் வளர்த்து, ஒரு மாதத்திற்குப் பின் தரமான கரும்பு நாற்றுக்களை மட்டும் தேர்வு செய்து நடவு செய்தால், கரும்பு வயலில் பயிர் எண்ணிக்கை பராமரிக்கப்பட்டு, கரும்பு மகசூல் அதிகரிக்கும். இதனால், விதைக் கரும்புக்கான செலவும் கணிசமாக குறைவதோடு, கரும்பின் சாகுபடிக்காலம் ஒரு மாதம் குறைகிறது. அதிகக் கிளைகள் வெடித்து, தனிக்கரும்பின் எடையும் அதிகரிக்கிறது.

இதனை கருத்தில் கொண்டு, சென்ற 202425 ஆம் நிதி ஆண்டில் துணை முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற பேரவையில், ‘சுய உதவிக் குழு மகளிர் விவசாயிகளால் உயர் மகசூல் தரும் கரும்பு இரகங்களின் பரு நாற்றுகளை உற்பத்தி செய்து விநியோகம் செய்திட, அலகுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் வீதம் 50 அலகுகளுக்கு ஒரு கோடி ரூபாய் சுழல் நிதியாக வழங்கப்படும்’ என்று அறிவித்தார்கள்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், தமிழ் நாட்டில்முதன்முறையாக, கரும்பு சாகுபடி செய்யப்படும் கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களில் 50 கிராம ஊராட்சிகளில் கரும்பில் நாற்று உற்பத்தியில் ஆர்வமுள்ள 20 சுய உதவிக்குழு மகளிர்களை ஒன்றாக இணைத்து குழு அமைத்து ஒவ்வொரு குழுவுக்கும் ரூ.2 இலட்சம் வீதம் 50 குழுக்களுக்கும் மொத்தம் ஒரு கோடி ரூபாய் சுழல் நிதியாக வழங்கப்பட்டது.

இச்சுழல் நிதியின் மூலம், 300 சதுர மீட்டர் பரப்பில் நிழல் வலைக்கூடம் அமைத்து, விதைக்கரணையிலிருந்து பரு எடுக்கும் மோட்டார் இயந்திரம், 1000 பிளாஸ்டிக் குழித்தட்டுக்கள், தேங்காய் நார் கொள்முதல் போன்ற பணிகளை இம்மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் கடந்த பிப்ரவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை மேற்கொண்டார்கள்.

தற்போது, இந்த 50 இடங்களிலும் பருசீவல் கரும்பு நாற்று உற்பத்தி துவங்கி, அருகில் உள்ள சர்க்கரை ஆலைகளில் பதிவு செய்துள்ள கரும்பு விவசாயிகளுக்கு தரமான கரும்பு பருசீவல் நாற்றுகள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, தரமான கரும்பு பருசீவல் நாற்றுக்கள் தேவைப்படும் விவசாயிகள் பின்வரும் இணைப்பில் குறிப்பிட்டுள்ள கிராம ஊராட்சிகளில் நாற்று உற்பத்தியினை மேற்கொண்டு வரும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களைத் தொடர்பு கொண்டு பயனடையலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

### அமெரிக்கா விதித்த 50 சதவிகித வரியால்

# திருப்பூர் ஆயத்த ஆடை ஏற்றுமதியாளர்களுக்கு ரூ.3 ஆயிரம் கோடி வர்த்தகம் பாதிப்பு!

## ஏற்றுமதியாளர்கள் சங்க தலைவர் கே.எம்.சுப்பிரமணியன் தகவல்!

திருப்பூர், ஆக. 29- அமெரிக்கா விதித்த 50 சதவீத வரியால் திருப்பூர் ஆயத்த ஆடை ஏற்றுமதியாளர்களுக்கு ரூ.3 ஆயிரம் கோடி வர்த்தக பாதிப்பு ஏற்படும் என்று திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்க தலைவர் கே.எம். சுப்பிரமணியன் கூறினார்.

50 சதவீத வரி அமல் :- இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 50 சதவீத வரியை அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் விதித்தார். இந்த வரி இரண்டு நாட்களுக்கு முன்பு அமலுக்கு வந்தது. இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு ஆயத்த ஆடைகள் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. டிரம்ப் விதித்த 50 சதவீத வரி விதிப்பு காரணமாக ஆயத்த ஆடை வர்த்தகம் பெரும் பாதிப்பை சந்தித்துள்ளது. இந்திய ஆயத்த ஆடை ஏற்றுமதியில் 68 சதவீத பங்களிப்பை திருப்பூர் மேற்கொண்டுள்ளது.

ரூ.12 ஆயிரம் கோடி வர்த்தகம் :- ஆயத்த ஆடை ஏற்றுமதி வர்த்தகம் திருப்பூரில் ஆண்டுக்கு ரூ.45 ஆயிரம் கோடிக்கு நடக்கிறது. இதில் அமெரிக்காவுக்கு மட்டும் ரூ.12 ஆயிரம் கோடி வர்த்தகம் நடைபெற்று வருகிறது. அமெரிக்கா அறிவித்த 50 சதவீத வரி காரணமாக கடந்த 20 நாட்களாக இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் ஆயத்த ஆடைகளை திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் நிறுத்தி வைத்திருந்தனர். அமெரிக்கா ஜனாதிபதி அறிவித்த 50 சதவீத வரி அமலுக்கு வந்ததால் திருப்பூர் ஆயத்த ஆடை ஏற்றுமதியாளர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.

**ரூ.3 ஆயிரம் கோடி வர்த்தகம் பாதிப்பு!**

இதுகுறித்து திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்க தலைவர் கே.எம்.சுப்பிரமணியன் கூறியதாவது:- திருப்பூரிலிருந்து அமெரிக்காவுக்கு ஆண்டுக்கு ரூ.12 ஆயிரம் கோடி ஆயத்த ஆடை ஏற்றுமதி நடந்து வருகிறது. 50 சதவீத வரி அமலுக்கு வந்ததால் அமெரிக்காவுடன் 30 சதவீத பாதிப்பு ஏற்படும் சூழல் எழுந்துள்ளது. அப்படி பார்த்தால் இன்னும் 4 மாதங்களுக்கு ஆயத்த ஆடை ஏற்றுமதி வர்த்தகம் தேகத்தை சந்திக்கும்.

ரூ. 3 ஆயிரம் கோடி வர்த்தக பாதிப்பு ஏற்படும் வாய்ப்புள்ளது. ஆனால் இந்த வர்த்தகம் பாதிப்பை சமாளிக்கும் வகையில் இங்கிலாந்துடன் வரியில்லா வர்த்தக ஒப்பந்தம் அமைந்துள்ளது. ஐரோப்பிய நாடுகளுடன் வரியில்லா வர்த்தகம் ஒப்பந்தம் இருப்பதால் அமெரிக்காவுடன் ஏற்படும் வர்த்தக இழப்பை இங்கிலாந்து, ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வர்த்தக இழப்பை சமாளிக்க முடியும்.

5 சதவீதம் குறைப்பு :- 50 சதவீத வரி விதிப்பு இரண்டு நாட்களுக்கு முன்பு அமலாகி உள்ளது. அமெரிக்க மக்களுக்கு தான் இந்த 50 சதவீத வரி பாதிப்பு ஏற்படும். உதாரணமாக இதுவரை ரூ.100-க்கு ஆடையை வாங்கியவர்கள், இனி ரூ.150- க்கு வாங்க கூடிய நிலை உருவாகியுள்ளது. கடந்த சில நாட்களாக கொச்சி, மும்பை, தூத்துக்குடி துறைமுகங்களில் ஆயத்த ஆடை அமெரிக்காவுக்கு அனுப்பி வைப்பது நிறுத்தம் செய்யப்பட்டிருந்தது. தற்போது அங்குள்ள பையர்கள், தங்களுக்கு குறைந்த விலையில் ஆடைகளை தயாரித்து கொடுக்கும்படி திருப்பூர் ஏற்றுமதியாளர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தி உள்ளனர். எங்களுடைய லாபத் தொகையில் இருந்து 5 சதவீதம் குறைத்து ஆர்டர்களை பெற தொடங்கியுள்ளோம்.

லாபம் குறைவு என்றாலும் வர்த்தக வாய்ப்புகளை கைவிட முடியாமல் அமெரிக்காவுக்கு வர்த்தகம் செய்து வருகிறோம். வர்த்தக வாய்ப்புகள் குறையும் போது திருப்பூரில் தொழிலாளர்களுக்கு வேலை இழப்பை சமாளிக்கும் வகையில் மற்ற நாடுகளுடன் ஏற்றுமதி வர்த்தகத்தை செய்து வேலை இழப்பு இல்லாமல் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம்.

ஒன்றிய அரசு சலுகைகள் :- ஒன்றிய அரசு திருப்பூர் ஆயத்த ஆடை ஏற்றுமதியாளர்களுக்கு சலுகைகளை வழங்கி ஊக்குவிக்க வேண்டும். குறிப்பாக டியூட்டி டிராபேக் சதவீதத்தை அதிகரிக்க வேண்டும். தொழில் கடனுக்கான வட்டி மானியத்தை உயர்த்த வேண்டும். கொரோனா காலத்தில் வழங்கப்பட்டது போல், அவசர கால கடன் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளோம். ஒன்றிய அரசு அதை பரிசீலித்து ஏற்றுமதியாளர்களுக்கு உதவ வேண்டும். என்று கோரிக்கை வைக்கிறோம் என்று அவர் கூறினார்.

### தி.மு.க. முப்பெரும் விழாவில் ‘‘பாவேந்தர் விருது’’க்குத் தேர்வாகியிருந்த – கழக மூத்த முன்னோடி

# கரூர் மாவட்ட கழக மூத்த முன்னோடி - குளித்தலை அ.சிவராமன் மறைவு!

## அமைச்சர் கே.என்.நேரு – வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. அஞ்சலி!

கரூர், ஆக.29- கழக மூத்த முன்னோடியும், கரூர் மாவட்ட தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினருமான குளித்தலை அ.சிவராமன் அவர்கள், நேற்று முன்தினம் (28.8.2025) இரவு 7.00 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அவருக்கு வயது 83.

அண்மைக் காலமாக உடல்நலம் குன்றியிருந்த அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். பின்னர் இல்லம் அழைத்து வரப்பட்டு மருத்துவர் கண்காணிப்பில் இருந்த அவர் திடீரென உடல்நலம் மிகவும் குன்றி நேற்று முன்தினம் (28.8.2025) இரவு 7.00 மணியளவில் இயற்கை எய்தினார்.

அவருக்கு அகிலாம்பாள் எனும் மனைவியும், சீனிவாசன், முத்துவேல் எனும் இரு மகன்களும், தெய்வானை எனும் மகளும் உள்ளார்கள்.

இவ்விணையரின் மூத்த புதல்வர் சீனிவாசன், அரசின் செய்தி - மக்கள் தொடர்புத் துறையில் உதவி இயக்குநராகவும், துணை முதல்வர் அவர்களின் மக்கள் தொடர்பு அலுவலராகவும் பணிபுரிந்து வருகிறார்.

மறைந்த குளித்தலை அ.சிவராமன் அவர்கள், இந்த ஆண்டு செப்டம்பர் திங்களில் தி.மு.க. தலைமைக் கழகம் சார்பில் நடைபெறவுள்ள “முப்பெரும் விழா”வில், ‘பாவேந்தர் விருது’க்கு, கழகத் தலைவர் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

அவரது மறைவு செய்தியறிந்து நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு, கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி, எம்.எல்.ஏ.க்கள் இரா. மாணிக்கம் (குளித்தலை), க. சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்), நேரில் சென்று மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர். குளித்தலை சிவராமன் மூத்த புதல்வர் சீனிவாசன், தமிழ்நாடு அரசின் செய்தி - மக்கள் தொடர்புத் துறையில் உதவி இயக்குநராகவும், துணை முதல்வர் அவர்களின் மக்கள் தொடர்பு அலுவலராகவும் பணி புரிந்து வருகிறார். அவரிடமும், குடும்பத்தார் உறவினர்களுக்கும் ஆறுதல் கூறினர். அனைத்து கழக நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினர்.

அவரது இறுதி ஊர்வலம், நேற்று (29.8.2025) பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து புறப்பட்டு நல்லடக்கம் நடைபெற்றது.

குளித்தலை சிவராமன் அவர்கள் குறித்த வாழ்க்கைக் குறிப்பு வருமாறு:-

குளித்தலையில் 1942 டிசம்பர் 3ஆம் தேதி சிவராமன் பிறந்தார். 1971 முதல் குளித்தலை நகரச் செயலாளராக 1988 வரை 18 ஆண்டுகளும், ஒருங்கிணைந்த திருச்சி மாவட்ட தொண்டரணி அமைப்பாளராகவும் பணியாற்றினார்.

தி.மு.கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்துகொண்டு 13 முறை சிறை சென்றுள்ளார்.

1986ஆம் ஆண்டு முதல் 1991 வரை குளித்தலை ஒன்றிய பெருந்தலைவராக பணியாற்றினார். அப்போது பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான சூரியனூர் பாலம், வாளந்தூர் பாலம், ரத்தினத்தாம்பட்டி பாலம் ஆகிய திட்டங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்தார். மேலும் பல பள்ளிகளுக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுத்தார்.

இவருடைய கழகப் பணி மற்றும் பொதுப்பணியின் காரணமாக 1989 ஆம் ஆண்டு நடந்த சட்டசபை தேர்தலில் தி.மு.க. சார்பில் குளித்தலை தொகுதியில் போட்டியிட வாய்ப்பு பெற்று குறைந்த ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தார்.

முத்தமிழறிஞர் அவர்கள் நீதி கேட்டு நடத்திய நெடிய பயணத்தில் கலந்து கொண்டார். திருச்சி மாவட்டத்தில் நடைபெற்ற மாநில அளவிலான இரண்டு மாநாடுகளில் வரவேற்புக் குழுச் செயலாளர்களில் ஒருவராகப் பணியாற்றினார்.



கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதியார் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நீலகிரி மாவட்டம் கீழ்குந்தா பேரூராட்சிக்குட்பட்ட குந்தா EB அப்பர் ஹேம்ப்பில் நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமினை, தமிழ்நாடு அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், நீலகிரி மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். முகாமில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட கலைஞர் காப்பீட்டு திட்டத்திற்காக விண்ணப்பித்த பயனாளிகளுக்கு உடனடியாக சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் பேசி கலைஞர் காப்பீட்டு அட்டையை வழங்கினர். உடன் வட்டாட்சியர் சுமதி, அரசு துறை அதிகாரிகள், மாவட்ட அவைத் தலைவர் போஜன், உதகை தெற்கு ஒன்றியம் (மேற்கு) செயலாளர் ஜெகதீஷ், குன்னூர் ஒன்றிய செயலாளர் பிரேம்குமார், உதகை தெற்கு ஒன்றியம் (கிழக்கு )செயலாளர் பரமசிவம், மாவட்ட விளையாட்டு அணி துணை அமைப்பாளர் தீபக்பரதன், பேரூர் கழக செயலாளர் சதீஷ் உட்பட கழக நிர்வாகிகள் , வார்டு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

### இளமைக் காலம் முதல் இறுதிக் காலம் வரை

# கழகத்திற்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டு பாதை மாறாமல் பயணித்த பெரியவர், குளித்தலை அ.சிவராமன்!

## மறைவுக்கு – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, ஆக. 30 –**

**முத்தமிழறிஞர் கலைஞர் – கழகத் தலைவர் ஆகியோர் மீது அதீத அன்பும் தீவிர கழகப்பற்றும் கொண்டிருந்த கழகத்தின் மூத்த முன்னோடியும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான குளித்தலை அ.சிவராமன் அவர்களின் மறைவுக்கு கழக இளைஞர் அணிச் செயலாளர் –துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:**

முத்தமிழறிஞர் கலைஞர் - கழகத் தலைவர் ஆகியோர் மீது அதீத அன்பும் தீவிர கழகப்பற்றும் கொண்டிருந்த கழகத்தின் மூத்த முன்னோடியும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான அய்யா குளித்தலை அ.சிவராமன் அவர்களின் மறைவு ஆழ்ந்த வருத்தத்தையும் வேதனையும் ஏற்படுத்துகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை முதல் முறை சட்டப்பேரவைக்கு அனுப்பிய குளித்தலை தொகுதியைச் சேர்ந்த அ.சிவராமன் அவர்கள் இளம் வயது முதலே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்.

1971-ஆம் ஆண்டு முதல் குளித்தலை நகரச் செயலாளராக 18 ஆண்டுகளும், ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத் தொண்டர் அணி அமைப்பாளராகவும் பணியாற்றினார்.

1982-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் அவர்கள், மதுரை முதல் திருச்செந்தூர் வரை மேற்கொண்ட நீதிகேட்டு நெடியபயணத்தில், கலந்துகொண்டு முழுமையான தூரத்துக்கும் உடன் நடந்து சென்ற புகழுக்குரியவர்.

1984-ஆம் ஆண்டு கரூர் நகரின் வெங்கமேடு பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் நடைபெற்ற, மாவட்ட மாநாட்டுப் பந்தலின் முன்பகுதி தீப்பிடித்து எரிந்த போது. அய்யா சிவராமன் தலைமையிலான ‘தி.மு.க. தொண்டர் படை’ களத்தில் இறங்கி தீயை அணைத்ததுடன், மாநாட்டு மேடை தீக்கிரையாகாமல் தடுக்கப்பட்டதையும் அதனால் முத்தமிழறிஞர் கலைஞரிடம் பாராட்டுப் பெற்றதையும் நம் ‘முரசொலி’ பாசறைப் பக்கத்தில் வெளியாகும் ஃபிளாஷ் பேக் பகுதியில் நினைவுகூர்ந்து பெருமையுடன் பகிர்ந்திருந்தார்.

தி.மு.கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களிலும் கலந்துகொண்டு 13 முறை சிறை சென்றுள்ள அவர், ஒருங்கிணைந்த



திருச்சி மாவட்டக் கழகத் துணைச் செயலாளராகவும், கரூர் மாவட்ட விவசாய அணிச் செயலாளராகவும், மாவட்ட தி.மு.க. பொருளாளராகவும் பணியாற்றி, கரூர் மண்ணில் கழகத்திற்கு பெரும் பக்கபலமாகத் திகழ்ந்தார்.

அவரது கழகப் பணிகளின் காரணமாக 1989-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில், குளித்தலை தொகுதியில் போட்டியிடும் வாய்ப்பினையும் வழங்கியது கழகம்.

கடந்த முறை கரூர் மாவட்டத்தில் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்கச் சென்றபோது, அய்யா அவர்களை நேரில் சந்தித்து, நலம் விசாரித்தேன். என் கரங்களைப் பற்றிக்கொண்டு, பழைய நினைவுகளை எல்லாம் பகிர்ந்துகொண்டார்.

இளமைக் காலம் முதல் இறுதிக் காலம் வரை கழகத்திற்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டு, பாதை மாறாமல் பயணித்த பெரியவர் குளித்தலை அ.சிவராமன் அவர்களின் பணிகளைப் போற்றும்விதத்தில் இந்த ஆண்டு கரூரில் நடைபெறவுள்ள கழக முப்பெரும் விழாவில், ‘பாவேந்தர் பாரதிதாசன்’ விருது பெறத் தேர்வாகியிருந்தார்.

அதற்குள் அவரது மறைவுச் செய்தி பேரிடியாக வந்திறங்கி, நம்மையெல்லாம் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தி இருக்கிறது. அய்யா சிவராமன் அவர்களின் மறைவு, ஈடு செய்யமுடியாத ஒன்றாகும்.

அவரை இழந்து வாடும் அவரது மகன் சிவ.சீனிவாசன் உள்ளிட்ட குடும்பத்தினருக்கும், கழக உடன்பிறப்புகளுக்கும், எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.